## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை

**அசல் வழக்கு எண்.163/2024**

2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 05ம் நாள் புதன் கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW2வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 செல்வி.S.கௌசல்யா என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | **சண்முகவேல்** | **தொழில் :** | விவசாயம் |
| **தந்தை பெயர் :** | ராமசாமி | **சமயம் :** | – |
| **ஊர் :** | துவறங்குறிச்சி | **வயது** | 54 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | – |

**05.11.2025**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதி ஆவேன், நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு ஆவணங்களாக கடந்த 16.01.1975 ல் என் அப்பா கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ–1** ஆக குறியிடுகிறேன்.18.07.2024 ல் 1,2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு மோசடியாக எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ–2**ஆக குறியிடுகிறேன். என் பெயர், 1,2 எதிர்வாதிகள் பெயரிலுள்ள கணினி சிட்டா அடங்கல் **வா.சா.ஆ–3** ஆக குறியிடுகிறேன். 03.10.2024 ல் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சிட்டா அடங்கல் **வா.சா.ஆ–4** ஆக குறியிடுகிறேன். 1ம் எதிர்வாதியின் கணவரின் கணினி இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ–5** ஆக குறியிடுகிறேன். என் பெயரிலுள்ள ஆதார் கார்டு நகல் (அசலுடன் ஒப்பிட்டு குறியிடப்படுகிறது)

**வா.சா.ஆ-6** ஆக குறியிடுகிறேன். 19.07.2024 ல் 1,2,3,4 எதிர்வாதிகள் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ-7** ஆக குறியிடுகிறேன். எதிர்வாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை(எண்ணிக்கை-4) **வா.சா.ஆ-8** ஆக குறியிடுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.